**விளக்கம் :** தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்கு உறுப்புகளையும் முறையே பெற்று வருவதனைப் பிற்காலத்தார் **நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா** என்று கூறுவர்.

தரவு முதலானவற்றை முறையாகக் கூறாததற்கு உரிய காரணத்தை இளம்பூரணர் விளக்குகிறார். ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குத் தாழிசை சிறந்தது ஆகலின் முற்கூறப்பட்டது. இடைநிலைப் பாட்டே எனக் கூறியதால் தாழிசையினும் முதலாவதாகக் கூறப்படுவது தரவு ஆகும்.

இடைநிலைப்பாட்டு → தாழிசை
போக்கு → சுரிதகம், வாரம், அடக்கியல்
அடை → தனிச்சொல்.

தனிச்சொல்லைப் பிற்கூறியதால் தாழிசைதோறும் தனிச்சொல் வருவதும் உண்டு எனவும் விளக்கம் தருகிறார் இளம்பூரணர். (128)

## தரவிற்கு அடிவரையறை (4 – 12)

**438. தரவே தானும் நாலடி இழிபாய்**
**ஆறுஇரண்டு உயர்வும் பிறவும் பெறுமே.**

**(இ-ள்)** கலிப்பாவின் **முதல் உறுப்பாக** விளங்குவது **தரவு**. இது நான்கடிச் சிற்றெல்லையையும் பன்னிரண்டு அடிப் பேரெல்லையையும் கொண்டது. இவற்றிற்கு உட்பட்டதாய் இடையில் உள்ள எல்லா அடிகளையும் பெற்றும் தரவு வரும். (129)

## தாழிசைக்கு அடிவரையறை

NOV 17

**439. இடைநிலைப் பாட்டே**
**தரவுஅகப் பட்ட மரபின என்ப.**

**(இ-ள்)** இடைநிலைப்பாட்டாவது **தாழிசை** ஆகும். அது முதல் உறுப்பாகிய தரவைவிடக் குறைந்த அடிகளைப் பெற்று வரும் மரபினை உடையது என்று சொல்லுவர் புலவர்.

**விளக்கம் :** தரவிற்கு வரையறுக்கப்பட்ட சிற்றெல்லை நான்கடியாகும். எனவே தாழிசை அவற்றினும் குறைந்த மூன்றடியாலும் இரண்டடியாலும் வரும். ஒத்தாழிசைக் கலிப்பாவில் இடம்பெறும் தாழிசை ஒருபொருள்மேல் மூன்று அடுக்கி வரும். (130)

## கலிப்பாவில் தனிச்சொல்லின் இடம்

**440. அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்**
**நடைநவின்று ஒழுகும் ஆங்குஎன மொழிப.**

**(இ-ள்)** அடைநிலைக் கிளவி என்பது தனிச்சொல்லாகும்.

இத்தனிச்சொல் இரண்டாம் உறுப்பாகிய தாழிசையின் பின்னர் மூன்றாம் உறுப்பாகப் பயின்றுவரும் நடையினை உடையது எனச் சொல்லுவர் புலவர்.

**விளக்கம் :** நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் வரும் உறுப்புகள் **தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம்** என்பவை ஆகும். இவற்றுள் தாழிசையை அடுத்துத் தனிச்சொல் மூன்றாம் உறுப்பாக நிற்கும். அத்தனிச்சொல் சிறுபான்மை தாழிசைக்கு முன்னரும் வரும். (131)

**சுரிதகத்தின் இலக்கணம்**

**441. போக்கியல் வகையே வைப்புஎனப் படுமே**
**தரவியல் ஒத்தும்[1] அதன்அகப் படுமே[2]**
**புரைதீர் இறுதி நிலைஉரைத்து அன்றே[3].**

**(இ-ள்)** போக்கியல் என்னும் பெயரால் குறிக்கப்படும் சுரிதகத்திற்கு வைப்பு என்னும் வேறுபெயரும் உண்டு. 1.அது தரவொடு ஒத்த அளவினைப் பெற்றும் வரும் 2.அதனினும் குறைந்த அளவினை உடையதாகவும் வரும் 3.அச்சுரிதகம் குற்றம் தீர்ந்த பாட்டினது இறுதிநிலையை உரைக்கும் தன்மையைக் கொண்டதாகும்.

**விளக்கம் :** சுரிதகத்திற்குப் **போக்கு, வைப்பு, அடக்கியல், வாரம்** என்னும் வேறுபெயர்களும் உண்டு. சுரிதகம் நான்கடிச் சிறுமையும் பன்னிரண்டு அடிப் பெருமையும் உடைய தரவினைப் போன்றும் அமையும். அந்நிலையே அன்றிச் சிற்றெல்லை மூன்று அடியையோ இரண்டு அடியையோ பெற்றும் வரும். கலிப்பாவிற்கு உரிய துள்ளல் ஓசை பெறுதல், நிரை முதலாகிய வெண்பா உரிச்சீர் மிகுதல், ஆசிரியப் பாவையோ வெண்பாவையோ போல் முடிதல் என்னும் இலக்கணங்கள் சுரிதகத்திற்கு உரியவை என்று இளம்பூரணர் விளக்குகின்றார். (132)

**தேவரைப் பராவும் ஒத்தாழிசைக் கலி**

**442. ஏனை ஒன்றே**
**தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே.**

**(இ-ள்)** முற்கூறப்பட்ட இருவகை ஒத்தாழிசைக் கலிப்பாக்களுள் ஒன்று நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவாகும். மற்றொன்று நேருக்கு நேர்நின்று தெய்வத்தைப் போற்றும் பொருண்மையினை உடைய கலிப்பா ஆகும். இதனைத் தேவரைப் பராவும் ஒத்தாழிசைக் கலி எனவும் கூறுவர். (133)

**தேவரைப் பராவும் ஒத்தாழிசைக் கலியின் வகைகள் (2)**

**443. அதுவே**
**வண்ணகம்[1] ஒருபோகு[2] எனஇரு வகைத்தே.**

**(இ-ள்)** தேவரை முன்னிலையில் நின்று போற்றிப் புகழ்கின்ற ஒத்தாழிசைக் கலிப்பாவானது 1.வண்ணகம் 2.ஒருபோகு என இருவகைப்படும். *(134)*

### வண்ணக ஒத்தாழிசைக் கலியின் உறுப்புகள் (4)

444. **வண்ணகம் தானே**
**தரவே[1] தாழிசை[2] எண்ணே[3] வாரம்[4] என்று**
**அந்நால் வகையில் தோன்றும் என்ப.**

**(இ-ள்)** வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா 1.தரவு 2.தாழிசை 3.எண் (அம்போதரங்கம்) 4.வாரம் (சுரிதகம்) என்று சொல்லப்பட்ட நான்குவகை உறுப்புகளை உடையதாய்த் தோற்றம் பெறும் என்று சொல்லுவர் புலவர். *(135)*

### வண்ணகத் தரவு – அடிவரையறை

445. **தரவே தானும்**
**நான்கும் ஆறும் எட்டும் என்ற**
**நேரடி பற்றிய நிலைமைத்து ஆகும்.**

**(இ-ள்)** வண்ணக ஒத்தாழிசையில் முதல் உறுப்பாக இடம்பெறுவது தரவு. அது **நாற்சீர்களைக்** கொண்ட அளவடியாய் நான்கு, ஆறு, எட்டு என்கின்ற எண்ணிக்கையினைப் பெற்றுவரும் வரையறையினை உடையதாகும். *(136)*

### வண்ணகத் தாழிசை – அடிவரையறை

446. **ஒத்துமூன்று ஆகும் ஒத்தா ழிசையே**
**தரவின் சுருங்கித் தோன்றும் என்ப.**

**(இ-ள்)** வண்ணக ஒத்தாழிசையில் இடம்பெறும் தாழிசை தம்முள் அளவொத்து மூன்றாகி அடுக்கி வரும். அத்தாழிசைகள் தரவினை விடக் குறைந்த அடிகளைக் கொண்டு நடக்கும் என்று சொல்லுவர் புலவர். *(137)*

### வண்ணக வாரம் – அடிவரையறை

447. **அடக்கியல் வாரம் தரவோடு ஒக்கும்.**

**(இ-ள்)** வண்ணக ஒத்தாழிசையில் இறுதி உறுப்பு அடக்கியல், வாரம் என்னும் பெயர்களைக் கொண்ட **சுரிதகம்** ஆகும். இது முற்கூறப்பட்ட (நூ.445) தரவோடு ஒத்த இயல்பினைக் கொண்டதாகும்.

இது தரவைப் போல் நான்கு சீர்களைக் கொண்ட அளவடியாய் 4, 6, 8 என்னும் எண்ணிக்கையில் வரும். *(138)*

**அம்போதரங்கம் – அடிவரையறை**

**448. முதல்தொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே.**

**(இ–ள்)** முதலில் தொடுக்கப்பட்ட உறுப்பு பெருகியும் பின் தொடுக்கும் உறுப்பு சுருங்கியும் வருவது **எண்** என்னும் அம்போதரங்க உறுப்பாகும்.

**விளக்கம் :** எண் என்பது அம்போதரங்கத்தைக் குறிக்கும். இது நாற்சீரடி, முச்சீரடி, இருசீரடி எனக் குறைந்து கொண்டே வருவதால் அம்போதரங்கம் (நீரலை) எனப் பெயர் பெற்றது. இரண்டு அடியால் வருவன இரண்டு; ஓரடியால் வருவன நான்கு; சிந்தடியால் வருவன எட்டு; குறளடியால் வருவன பதினாறு எனப் பிறநூல் ஆசிரியர் உரைப்பர். இவற்றைப் பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண் என்றும் கூறுவர். தொல்காப்பியருக்கு இவ்வரையறை இல்லை என்கிறார் இள்ம்பூரணர். (139)

**வண்ணகம் எண் (அம்போதரங்கம்) – சிறப்பு விதி**

**449. எண்இடை ஒழிதல் ஏதம் இன்றே**
**சின்னம் அல்லாக் காலை யான.**

**(இ–ள்)** மேற்சொல்லப்பட்ட எண் ஒவ்வொன்றும் இடையில் இல்லாமல் வருதல் உண்டு. அது குற்றம் ஆகாது. அந்நிலை தனிச்சொல் இல்லாத இடத்துப் பொருந்தி வரும்.

**விளக்கம் :** மேற்சொல்லப்பட்ட வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஐந்து உறுப்புகளையும் பெற்று வரும். அந்நிலையில் தனிச்சொல் வரும்போது அம்போதரங்கமாகிய எண்உறுப்புகள் இடையீடு இன்றித் தொடர்ந்து வருதல் வேண்டும். தனிச்சொல் வராதவிடத்து இடையில் எண் இல்லாமலும் வரலாம். வண்ணக ஒத்தாழிசைக்கலி தனிச்சொல் இன்றி எண் இடையிட்டு வரும் நிலையில் வண்ணக ஒருபோகு எனப் பெயர் பெறும். சின்னம் - தனிச்சொல்.

ஒரு தரவு, மூன்று தாழிசை, பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண், தனிச்சொல், சுரிதகம் என நிரல்பட நிற்கும். இதனை ஒருசார் ஆசிரியர் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா என்று கூறுவர் என இளம்பூரணர் குறிப்பிடுகின்றார். (140)

**ஒருபோகின் வகைப்பாடு (2)**

**450. ஒருபோகு இயற்கையும் இருவகைத்து ஆகும்.**

**(இ–ள்)** ஒருபோகு என்னும் கலிப்பா இரண்டு வகைப்படும் இயல்பினை உடையதாகும். (141)

**ஒருபோகு வகைகளின் பெயர்கள் (2)**

451. **கொச்சக ஒருபோகு[1] அம்போ தரங்கம்[2] என்று ஒப்ப நாடி உணர்தல் வேண்டும்.**

(த-ள்) ஒருபோகு என்னும் கலிப்பா 1.கொச்சக ஒருபோகு 2.அம்போதரங்க ஒருபோகு என இருவகைப்படும். அவற்றைப் பொருந்தும் முறையில் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். (142)

**கொச்சக ஒருபோகு கலிப்பாவின் இயல்புகள் (5)**

452. **தரவுஇன்று ஆகித் தாழிசை பெற்றும்[1]**
**தாழிசை இன்றித் தரவுஉடைத்து ஆகியும்[2]**
**எண்இடை யிட்டுச் சின்னம் குன்றியும்[3]**
**அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகியும்[4]**
**யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது[5]**
**கொச்சக ஒருபோகு ஆகும் என்ப.**

(த-ள்) ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குரிய உறுப்புகள் பலவாகும். அவற்றுள் 1.தரவாகிய முதல் உறுப்பு இல்லாமல் தாழிசை முதலான உறுப்புகளைப் பெற்று வருதல் 2.தாழிசை இல்லாமல் தரவு முதலான உறுப்புகளைப் பெற்று வருதல் 3.எண்ணாகிய உறுப்புகள் இடம்பெறத் தனிச்சொல் வாராமல் இருத்தல் 4.சுரிதகம் இல்லாமல் தரவு தானே தொடர்ந்து சென்று முடிதல் 5.யாப்பாலும் பொருண்மையாலும் வேறுபட்டு வருதல் என்னும் இலக்கணங்களை உடையது கொச்சக ஒருபோகு என்னும் பெயரினைப் பெறும் என்று சொல்லுவர் புலவர்.

**விளக்கம் :** நூற்பாவில் தாழிசை பெற்றும் எனக் கூறியதால் தரவு தாமே வருதலும், தரவுடைத்தாகியும் என்று கூறியதால் தாழிசை தானே வருதலும் கொச்சக ஒருபோகு கலிப்பா ஆகும். சின்னம் என்றதனால் எண்ணின்கண் இடையெண், சிற்றெண் குறைந்து வந்தாலும் அதுவும் ஒருபோகாகவே கருதப்படும்.

ஒத்தாழிசையில் இயற்றப்பட்ட செய்யுளாயினும் கடவுள் வாழ்த்துப் பொருண்மையின்றிக் காமப் பொருளாக வருதல், ஒத்தாழிசைக்கு உறுப்பாகியவற்றுள் ஒன்றோ, இரண்டோ குறைந்து வருதல் ஆகிய அனைத்தும் கொச்சக ஒருபோகு எனப் பெயர்பெறும் என்கிறார் இளம்பூரணர். (143)

**கொச்சக ஒருபோகு - அடிவரையறை (10 - 20)**

453. **ஒருபான் சிறுமை[1] இரட்டிஅதன் உயர்பே[2].**

(த-ள்) மேற்சொல்லப்பட்ட கொச்சக ஒருபோகிற்குப் 1.பத்துஅடிச் சிற்றெல்லையாகும் 2.இருபது அடி அதன் பேரெல்லையாகும். (144)

**அம்போதரங்க ஒருபோகு - அடிவரையறை (30 - 60)**

**454. அம்போ தரங்கம் அறுபதிற்று அடித்தே[1]**
**செம்பால் வாரம் சிறுமைக்கு எல்லை[2].**

**(இ-ள்)** அம்போதரங்க ஒருபோகு என்னும் பாவிற்குப் 1.பேரெல்லை அறுபது அடியாகும் 2.முப்பதடி நடுவாகிய நிலை சிறுமைக்கு எல்லையாகும்.

**விளக்கம் : செம்பால் வாரம்:** செம்பாதி (அ) சரிபாதி (செம்பாகம்). இதனையே தொல்காப்பியர் செம்பால் வாரம் என்று குறிப்பிடுகின்றார். அதாவது அறுபதில் செம்பாகம் முப்பதாகும். அம்போதரங்க ஒருபோகிற்குச் சிற்றெல்லை முப்பது அடியாகும். (145)

**அம்போதரங்க ஒருபோகு - உறுப்புகள் (5)**

**455. எருத்தே[1] கொச்சகம்[2] அராகம்[3] சிற்றெண்[4]**
**அடக்கியல் வாரமோடு[5] அந்நிலைக்கு உரித்தே.**

**(இ-ள்)** அம்போதரங்க ஒருபோகிற்கு 1.எருத்து (தரவு) 2.கொச்சகம் 3.அராகம் 4.சிற்றெண் 5.அடக்கியல் என்னும் வாரம் என்பன ஐந்தும் உறுப்புகள் ஆகும்.

**விளக்கம் :** மேற்கூறப்பட்ட ஐந்து உறுப்புகளுள் எண் என்பது ஒன்றாகும். அவ்வெண் பேரெண்ணில் சிற்றெண் வரப்பெறுமாயினும் தரவு முதலான உறுப்புகள் முறையாய் வருதல், மயங்கி வருதல் ஆகிய அனைத்தும் அம்போதரங்க ஒருபோகிற்கு உரிய இலக்கணமாகும்.

இவ்வுறுப்புகள் அனைத்தும் பரிபாடலுக்கும் உரியவை. ஆயினும் பேரெல்லையாகிய அறுபது அடியில் குறைந்து வந்தால் உறுப்புகள் முறைபிறழ்ந்து வரும். ஒத்து வந்தால் அறுபதின் மிக்கு வருதல் என்னும் தன்மை கொண்டது அம்போதரங்க ஒருபோகு என்கிறார் இளம்பூரணர். (146)

**கலி வெண்பா**

**456. ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்**
**திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே.**

**(இ-ள்)** ஈற்றடிவரை ஒருபொருளைக் குறித்து வருதல், வெண்பாவிற்குரிய வெண்டளை பொருந்திய அடி (வெள்ளடி) இயல்பால் திரிபின்றி முடிதல் என்னும் இலக்கணத்திலிருந்து மாறுபடாமல் அமைவது கலிவெண்பாட்டாகும்.

**விளக்கம் :** கலிவெண்பாட்டு என்பதன் வேறுபெயர் வெண்கலிப் பாட்டு ஆகும். வெண்சீர், இயற்சீர் வெண்டளைகளைப் பெற்று ஈற்றடி முச்சீரால் வருவனவும் பிறதளையான் வந்து ஈற்றடி முச்சீரால் வருவனவும் கலிவெண்பாட்டாகும். **வெண்டளையான்** வருவதனை **வெண்கலிப்பா** என்றும் **பிற தளையான்** வருபவற்றைக் **கலிவெண்பா** என்றும் வேறுவேறாகக் கூறுபவரும் உளர். (147)

## கொச்சகக் கலிப்பாவின் இலக்கணம்

457. **தரவும் போக்கும் இடையிடை மிடைந்தும்[1]**
**ஐஞ்சீர் அடுக்கியும்[2] ஆறுமெய் பெற்றும்[3]**
**வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்[4]**
**பாநிலை வகையே கொச்சகக் கலிஎன**
**நூல்நவில் புலவர் நுவன்றுஅறைந் தனரே.**

**(இ-ள்)** 1.முதல் உறுப்பாகிய தரவும் இறுதி உறுப்பாகிய சுரிதகமும் அம்முறையில் வாராமல் மாறிப் பாவின் இடையிடையே வருதல் 2.ஐஞ்சீரடி பல வருதல் 3.தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், சொற்சீரடி, முடுகியலடி என்னும் ஆறு உறுப்பினையும் பெற்று வருதல்; மேற்கூறப்பட்ட உறுப்புகளைப் பெற்றும் பெறாமலும் வருதல் 4.வெண்பாவிற்குக் கூறப்பட்ட இலக்கணத்தைக் கொண்டு வெளிப்படுதல் ஆகிய இயல்புகளை உடையது கொச்சகக் கலிப்பாவாகும். இவ்வாறு செய்யுள் இலக்கணத்தை அறிந்த புலவர் வரையறுத்தனர்.

**விளக்கம் :** தரவு முதலான ஆறு உறுப்புகளுள் அராகம் என்னும் உறுப்பைக் கூட்டியும் முடுகியல் என்னும் உறுப்பை விடுத்தும் அமைவது கொச்சகக் கலியாகும். ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குத் தாழிசையாகிய உறுப்பு மிகுந்து வரும். அதுபோலக் கொச்சகக் கலிப்பாவிற்கு வெண்பாவாகிய உறுப்பு மிகுந்து வரும். கொச்சகக்கலிக்குக் குறிப்பிடப்பட்ட உறுப்புகள் குறைந்தும் மயங்கியும் மிகுந்தும் வரும் என்கிறார் இளம்பூரணர். (148)

## உறழ்கலியின் இலக்கணம்

458. **கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்[1]**
**போக்குஇன்று ஆகல்[2] உறழ்கலிக்கு இயல்பே.**

**(இ-ள்)** 1.ஒருவர் ஒன்று கூற மற்றவர் அதற்கு மறுமொழி கூறுவார்; அவ்வுரையாடல் முறை அடுத்தடுத்து வருதல் 2.கலிப்பாவின் இறுதி உறுப்பாகிய சுரிதகம் இல்லாது இருத்தல் என்னும் இரண்டும் உறழ்கலிக்குரிய இலக்கணமாகும்.

**விளக்கம் :** உறழ்கலி கொச்சகக் கலிப்பாவின்பின் வைக்கப்பட்டது. அதனால் அதற்குரிய பிற உறுப்புகள் எல்லாம் உறழ்கலிக்கும் உரியனவாகும் என்கிறார் இளம்பூரணர். (எ-டு)

யாரிவன் எங்கூந்தல் கொள்வான் இதுவுமோர்
ஊராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மனை
வாரல்நீ வந்தாங்கே மாறு

இது தலைமகள் கூற்று.

என்னிவை ஒருயிர்ப் புள்ளின் இருதலை உள்ளொன்று
போரெதிர்ந் தற்றாப் புலவல்நீ கூறிஒனன்
ஆருயிர் நிற்குமா றியாது

இது தலைவன் கூற்று.

ஏஎ தெளிந்தோம்யாங் காயாதி எல்லாம்வல் எல்லா
பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு
வருந்தல்நின் வஞ்சம் உரைத்து.

இது தலைவி கூற்று.

மருந்தின்று மன்னவன் சீறில் தவறுண்டோ நீநயந்த
இன்னகை தீதோ இலேன்.

இது தலைவன் கூற்று.

மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே உறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎம் எனநெருங்கில் தப்பினேன்
என்றடி சேர்தலும் உண்டு.

இப்பாடல் சுரிதகம் இன்றி வந்துள்ளது. (149)

## ஆசிரியப்பா - அடிவரையறை (3 - 1000)

**459. ஆசிரியப் பாட்டின் அளவிற்கு எல்லை**
**ஆயிரம் ஆகும்[1] இழிபுமூன்று அடியே[2].**

**(இ-ள்)** ஆசிரியப்பாவிற்குப் 1.பேரெல்லை ஆயிரம் அடியாகும் 2.சிற்றெல்லை மூன்றடியாகும்.

**விளக்கம் :** இடைப்பட்டன எல்லா அடியானும் ஆசிரியப்பா வரும். பேரெல்லைக்குப் பத்துப்பாட்டு, சிலம்பு, மணிமேகலையுள் கண்டு கொள்க என்பர் இளம்பூரணர்.

ஐங்குறுநூறு 3 - 6; குறுந்தொகை 4-8; நற்றிணை 9 - 12; அகநானூறு 13 - 31; கலித்தொகை 18 - 80 என எட்டுத் தொகையிலும் முல்லைப்பாட்டு - 103 அடி; மதுரைக்காஞ்சி - 782 அடி எனப் பத்துப் பாட்டிலும் அடிவரையறை இடம்பெற்றுள்ளன. ஆசிரியப்பாவைப் போன்றது வஞ்சிப்பா. ஆதலால் அதன் பேரெல்லையும் ஆயிரம் அடியாகக் கொள்ளப்படும் என்கிறார் இளம்பூரணர். (150)